பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
12 05 2025 **MONDAY 7.15 PM**
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியாவின் ராணுவ நிலைப்பாடு குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி இன்றிரவு எட்டு மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

- இந்தியா – பாகிஸ்தான் இடையிலான ராணுவ நடவடிக்கைகள் நிறுத்தம் தொடர்பாக ராணுவ அதிகாரிகள் நிலையிலான பேச்சுவார்த்தை இன்று மாலை நடைபெற்றது.

- சத்தீஸ்கர் மாநிலத்தில் ஒரு பெண் உட்பட ஆறு நக்சலைட்டுகள் சரணடைந்துள்ளனர்.

- அமெரிக்காவும், சீனாவும் பரஸ்பரம் இறக்குமதி பொருட்களுக்கான வரியை குறைக்க முடிவு செய்துள்ளன.

- ஐக்கிய அரபு எமிரேட்டில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

--இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்றிரவு எட்டு மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பிறகு முப்படைகளின் சார்பில் ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையை இந்தியா மேற்கொண்ட பின்னர் பிரதமர் நாட்டு மக்களிடையே உரையாற்றுவது இது முதல் முறையாகும்.

பஹல்காமில் கடந்த மாதம் 22-ஆம் தேதி பாகிஸ்தானை சேர்ந்த தீவிரவாதிகள் நடத்திய ஈவு இரக்கமற்ற கொடூர தாக்குதலில் 25 இந்தியர்கள் மற்றும் நேபாள நாட்டை சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடியாக இந்தியா இம்மாதம் 7-ஆம் தேதி மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலில் பாகிஸ்தானில் உள்ள ஒன்பது தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டு, நூற்றுக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக இன்று நண்பகல் நடத்திய உயர்மட்ட கூட்டத்தில், மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல், முப்படைகளின் தலைமை தளபதி திரு அனில் சௌகான், முப்படைகளின் தளபதிகள் மற்றும் உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>

இந்தியா – பாகிஸ்தான் ராணுவ செயல்பாடுகளுக்கான தலைமை இயக்குனர்கள் இடையேயான பேச்சுவார்த்தை இன்று மாலை நடைபெற்றது.

சண்டை நிறுத்தம் தொடர்பான கூடுதல் அம்சங்கள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் தீவிரவாதிகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கை என்றும், இதில் பாகிஸ்தான் ராணுவம் தலையிட்டது துரதிருஷ்டவசமானது என்றும் இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் குறித்து முப்படைகளின் தலைமை இயக்குனர்கள் இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசினர்.

அப்போது பேசிய விமானப்படை செயல்பாடுகளுக்கான தலைமை இயக்குனர் ஏர் மார்ஷல் ஏ கே பாரதி, தீவிரவாதிகளுக்கு ஆதரவாக பாகிஸ்தான் ராணுவம் செயல்பட்டது வேதனைக்குரியது என்றும், இதன் காரணமாகவே நமது ராணுவம், பாகிஸ்தான் ராணுவத்துக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்வது தவிர்க்க இயலாததாகிவிட்டது என்றும் கூறினார்.

முப்படைகளின் ஒருங்கிணைந்த பாதுகாப்பு கட்டமைப்பு வலுவாக இருந்ததன் காரணமாக பாகிஸ்தான் தாக்குதல் நடத்த மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

வான்வழி தாக்குதலை முறியடித்ததில் ஆகாஷ் ஏவுகணை செயல்பாடுகள் சிறப்பாக அமைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் ஏவிய ட்ரோன்கள், ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களை, வான் பாதுகாப்பு கட்டமைப்பு வெற்றிகரமாக வீழ்த்தியதாக அவர் கூறினார்.

இந்த நடவடிக்கைகளின்போது இந்திய தரப்புக்கு குறைந்த அளவே சேதம் ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசு கடந்த பத்தாண்டுகளாக பின்பற்றிய கொள்கை மற்றும் பாதுகாப்புப்படைகளுக்கு அளித்த ஆதரவு நமது கட்டமைப்பை வலுப்படுத்த உதவியதாக ஏர் மார்ஷல் ஏ கே பாரதி கூறினார்.

முப்படைகளின் கூட்டு முயற்சியே எதிரிகளின் தாக்குதல்களை வெற்றிகரமாக முறியடித்ததாக ராணுவ செயல்பாடுகளுக்கான தலைமை இயக்குனர் லெப்டினன்ட் ஜென்ரல் Rajiv Ghai கூறினார்.

இதில், எல்லை பாதுகாப்புப்படையும் சிறப்பாக செயல்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நமது பாதுகாப்பு கட்டமைப்பு, பல்வேறு அடுக்குகளை கொண்டது என்றும், இதன் காரணமாக இவற்றை மீறி எதிரிகள் எந்தவொரு இலக்கையும் தாக்க இயலாது என்றும் அவர் கூறினார்.

எந்தவொரு சவாலையும் எதிர்கொள்வதற்கு ஏதுவாக, கடற்படை தொடர்ந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அதன் செயல்பாடுகளுக்கான தலைமை இயக்குனர் வைஷ் அட்மிரல் பிரமோத் கூறினார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை முடியும் வரை கடற்படை தயார் நிலையில் இருந்ததாகவும், அவர் தெரிவித்தார்.

<<<<<>>>>

இந்தியா – பாகிஸ்தான் இடையிலான ராணுவ நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதையடுத்து, இன்று முதல் நாட்டின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள 32 விமான நிலையங்களிலிருந்து, விமான போக்குவரத்து தொடங்கப்பட்டுள்ளது.

இண்டிகோ மற்றும் ஏர் இண்டியா விமான நிறுவனங்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பில், மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, விமான போக்குவரத்து இன்று முதல் தொடங்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

விமானம் புறப்படுவதற்கான நேரம் குறித்து பயணிகள் அவ்வப்போது வரும் தகவல்களை உறுதி செய்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 22–ஆம் தேதிவரை தங்கள் பயணத்தை ரத்து செய்வது மற்றும் மாற்றியமைப்பது குறித்து முடிவு செய்து கொள்ளலாம் என்றும், கட்டணச்சலுகை குறித்து விமான நிறுவனங்களுடன் கேட்டறிந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் மூலம் தீவிரவாதத்துக்கு எதிரான உறுதியான செய்தியை இந்தியா உலகிற்கு அளித்துள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு சம்பீத் பாத்ரா, தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்வதாகவும், சர்வதேச அரங்கில் பாகிஸ்தானை தனிமைப்படுத்துவதற்காகவும் 20 நாடுகளின் தலைவர்களோடு பிரதமர் நேரடியாக பேசியதாகவும் தெரிவித்தார்.

இதன் காரணமாக இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்ததாக அவர் கூறினார்.

ஆபரேஷன் சிந்தூரின் வெற்றிக்காக முப்படைகளுக்கு நாட்டு மக்கள் அனைவரும் நன்றி தெரிவிப்பதாகவும் திரு சம்பீத் பாத்ரா தெரிவித்தார்.

<<<<<<>>>>

சத்தீஸ்கர் மாநிலத்தில் ஒரு பெண் உட்பட ஆறு நக்சலைட்டுகள் சரணடைந்துள்ளனர்.

தண்டேவாடா மாவட்டத்தில் இன்று காவல்துறை துணைத்தலைவர் திரு கமலோச்சன் காஷ்யப் முன்பு தங்களது ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்தனர்.

சத்தீஸ்கர் அரசின் நக்சலைட்டுகள் மறுவாழ்வு திட்டத்தின்கீழ், இவர்கள் சரணடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நக்சலைட் அமைப்பை சேர்ந்த பலர் பொருளாதார ரீதியாக பல்வேறு இன்னல்களை சந்தித்து வருவதாகவும், அதற்கு தீர்வுகாணும் வகையிலும் சத்தீஸ்கர் அரசு இந்த திட்டத்தை அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின்படி சரணடையும் நக்சலைட்டுகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவியும், திறன் மேம்பாட்டுக்கான பயிற்சியும் வழங்கப்பட உள்ளது.

விவசாயம் தொழிலுக்கு நிலம் வழங்குவது உள்ளிட்ட உதவிகளையும் அம்மாநில அரசு செய்து வருகிறது.

இந்த திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து இதுவரை தொள்ளாயிரத்து 73 நக்சலைட்டுகள் சரணடைந்து இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் திருமதி Raksha Nikhil Khadse கூறியுள்ளார்.

பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனை கருத்தில்கொண்டு இளையோர் நலனுக்காக பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக கூறினார்.

இவற்றை இளையோர் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>

அமெரிக்காவும், சீனாவும் தங்களுக்கு இடையே விதிக்கப்பட்டிருந்த பொருட்களுக்கான வரியை 90 நாட்களில் படிப்படியாக குறைக்க முடிவு செய்துள்ளன.

சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனிவாவில் நடைபெற்ற இருநாடுகளுக்கும் இடையே நடைபெற்ற வர்த்தகம் தொடர்பான பேச்சுக்களுக்கு பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இந்த முடிவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி, அமெரிக்கா, தற்காலிகமாக சீனப் பொருட்களுக்கான வரியை 145 சதவீதத்தில் இருந்து, 30 சதவீதம் வரை குறைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு சீனா விதித்துவரும் 125 சதவீத வரியை பத்து சதவீதமாக குறைப்பது என்றும் அந்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு உலக சந்தையை எதிர்நோக்கியிருந்த வர்த்தக நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி ரைவக்கும் வகையில் அமைந்துள்ளது

<<<<<<>>>>

போர் நிறுத்தம் தொடர்பாக, ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டினுடன் பேச்சுக்கள் நடத்த யுக்ரைன் அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி ஒப்புதல் தெரிவித்துள்ளார்.

இந்த பேச்சுக்கள் துருக்கியில் நடைபெறும் என்று திரு ஜெலன்ஸ்கி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப், யுக்ரைன் அதிபரை தொடர்புகொண்டு போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுக்களை ரஷ்ய அதிபருடன் நடத்துமாறு கேட்டுக்கொண்டார்.

இந்த பேச்சுக்கள் துருக்கியில் வரும் வியாழக்கிழமையன்று நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>

ஐக்கிய அரபு எமிரேட்டில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

மகளிர் 200 மீட்டர் ஓட்டத்தில் Moumita வெள்ளிப்பதக்கம் வென்றார்.

நீளம் தாண்டுதலில் Ancy Sojan வெள்ளிப்பதக்கத்தையும், Shaili Singh வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

Triple Jump-ல் Niharika Vashisht வெண்கலப்பதக்கம் வென்றார்.

<<<<<<>>>>

உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

Cyprus–ன் Nicosia-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்பு குழு பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

<<<<<<>>>>

மகளிர் புரோ ஹாக்கி லீக் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

Salima Tete தலைமையிலான இந்த அணியில் 24 பேர் இடம்பெற்றுள்ளனர்.

<<<<<<>>>>

ஆசிய செஸ் சாம்பியன் போட்டியின் ஐந்தாவது சுற்று முடிவில் நான்கரை புள்ளிகளுடன் இந்தியாவின் முரளி கார்த்திகேயன் முதலிடத்தில் உள்ளார்.

<<<<<<END>>>>